ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2360/02 - 2023 නොවැම්බර් මස 27 වැනි සඳුදා - 2023.11.27

*2360/02 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

### வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

2023 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 44(9) மற்றும் 44(10)இன் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் ஆக்கப்பட்ட தீர்மானங்கள்.

முனைவர் **பி. நந்தலால் வீரசிங்க,**
ஆளுநர்,
இலங்கை மத்திய வங்கி.

கொழும்பு,
2023, நவெம்பர் 15.



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2023 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட தீர்மானங்கள்**

1. எடுத்துக்காட்டல்

1.1 இத்தீர்மானங்கள், 2023 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தீர்மானங்கள் என எடுத்துக்காட்டப்படுதல் வேண்டும்.

2. திட்டத்தின் நிர்வாகமும் முகாமைத்துவமும்

2.1 இலங்கை மத்திய வங்கி தொடர்பில் 2023 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கின்ற வகையில், இலங்கை மத்திய வங்கியானது இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் நாளாந்த நிருவாகத்துடனும், முகாமைத்துவத்துடனும் தொடர்புடைய அதன் தத்துவம், கடமை மற்றும் பணியை இலங்கை மத்திய வங்கியின் வைப்புக் காப்புறுதி மற்றும் தீர்மானங்கள் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு ஒப்படைவு செய்கின்றது.

3. இழப்பீட்டின் உயர்ந்தபட்ச தொகை

3.1 ஒவ்வொரு வைப்பாளர்களினதும் எந்தவொரு நாணயத்திலும் குறிப்பிடப்பட்ட அனைத்து காப்பீடு செய்யப்பட்ட வைப்பு பொறுப்புக்களையும் ஒருங்கிணைத்து, அங்கத்துவ நிறுவனத்தின் உரிமத்தை இரத்துச்செய்த திகதியில் உள்ளவாறான ஏதேனும் அட்டுறு வட்டியும் உள்ளடங்கலாக, “வைப்பாளர் ஒருவருக்கு” என்ற அடிப்படையில் அங்கத்துவ நிறுவனங்களின் காப்பீடு செய்யப்பட்ட வைப்புக்கள் தொடர்பிலான செலுத்தத்தக்க இழப்பீடு கணிப்பீடுசெய்யப்படுவதுடன் தொடர்ந்துவரும் காலப்பகுதிக்காக வட்டி எதுவும் செலுத்தப்படாது.

(அ) வைப்பாளர்களின் செலுத்தத்தக்க இழப்பீட்டு தொகையானது, இலங்கை ரூபா வைப்புக்கள் மற்றும் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் ஆகிய இரு வைப்புக்கள் தொடர்பிலும், மேலே பந்தி 3.1 இல் கணிப்பீடுசெய்யப்பட்டவாறு மொத்த காப்பீடுசெய்யப்பட்ட வைப்புக்களினது ரூபா பதினொரு இலட்சம் (ரூ.1,100,000) உயர்ந்தபட்ச தொகைக்குள் மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

(ஆ) வெளிநாட்டு நாணய வைப்புக்களின் விடயத்தில், இழப்பீட்டு கொடுப்பனவானது ரூபா பதினொரு இலட்சம் (ரூ.1,100,000) உயர்ந்தபட்ச தொகைக்கு உட்பட்டு அதற்கு சமமான இலங்கை ரூபாவாக காணப்படும்.

4. வைப்பாளர்களினால் கோரிக்கைகளை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி

4.1 2021.08.06 ஆம் திகதிக்கு முன்னர், உரிமம் இரத்துச்செய்யப்பட்ட அல்லது இடைநிறுத்தப்பட்ட அங்கத்துவ நிறுவனங்களின் விடயத்திற்கு ஏற்றவாறு, காப்பீடு செய்யப்பட்ட வைப்புக்களின் வைப்பாளர் ரூபா பதினொரு இலட்சம் (ரூ.1,100,000) உயர்ந்தபட்ச வரையறைக்குட்பட்டு இழப்பீட்டினைப் பெறுவதற்கு உரித்துடையவராவதுடன் அத்தகைய அங்கத்துவ நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட உரிமம் இரத்துச்செய்யப்பட்ட அல்லது இடைநிறுத்தப்பட்ட திகதியிலிருந்து நான்கு ஆண்டுகாலம் முடிவுறுவதற்குள் அவ்வைப்பாளரினால் இழப்பீட்டிற்கான முறையாக பூர்த்திசெய்யப்பட்ட கோரிக்கையை சமர்பிக்கின்றவரையில் இழப்பீட்டைப் பெறுவதற்கு உரித்துடையவராவார்.

4.2 2021.08.06 ஆம் திகதியன்று அல்லது அதற்கு பின்னர் உரிமங்கள் இரத்துச்செய்யப்பட்டுள்ள அங்கத்துவ நிறுவனங்களின் காப்பீடு செய்யப்பட்ட வைப்புக்களின் வைப்பாளர்கள், ரூபா பதினொரு இலட்சம் (ரூ.1,100,000) உயர்ந்தபட்ச தொகைக்குட்பட்டு, அங்கத்துவ நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட உரிமத்தை இரத்துச்செய்யப்பட்ட திகதியிலிருந்து ஆறு ஆண்டுகளுக்குள் அவ்வைப்பாளர்கள் இழப்பீட்டுக்கான முறையாக பூர்த்திசெய்யப்பட்ட கோரிக்கையை சமர்ப்பிக்கின்ற வரையில், இழப்பீட்டைப் பெறுவதற்கு உரித்துடையவராவார்.

5. ஒழுங்குவிதிகளை நீக்குதல்

5.1 2023 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் நியமனத் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் வகையில், 2239/52 ஆம் இலக்க 2021 ஒகத்து 06 ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்ட ஒழுங்குவிதிகள் நீக்கப்படுகின்றன.

6. நடைமுறைக்குவரும் திகதி

6.1 இத்தீர்மானங்கள், 2023 நவெம்பர் 15 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

EOG 11 - 0294

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.